10.09.2025 பி.வா.சா.5 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஓ.எஸ்.எண். 14 /2016 ) திருமதி.வேலம்மாள்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை-

1) வழக்கின் முழு விவரமும் எனக்கு தெரியுமா எனறால் முழு விவரமும் தெரியாது. வழக்கின் வாதி எதிர்வாதி என்ன என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவாச்சொத்து ஆரம்பத்தில் தேனம்மாளுக்கும், மாரியப்ப நாடாருக்கும் தான் சொந்தம் என்றால் சரிதான். நான் வாதி கொம்புமாடத்திக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தில் நான்குமால் விவரங்கள் குறித்து குறிப்பிட்டு தான் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். தேனம்மாள்,மாரியப்ப நாடார் ஆகிய இருவரும் இந்த வழக்கின் பிரதிதிவாதிகளுக்கு ஏதாவது எழுத்துப்பூர்வமான பதிவு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்களா என்றால் தெரியாது. நிருபண வாக்குமூலம் நான் சொல்லி தயார் செய்து போட்டது தான் என்றால் சரிதான். நிருபண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் 5 வீடுகள் கட்டியதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எந்த வருடம் எப்போது கட்டினார்கள் என்று சொல்லவில்லை என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நானும்,கருப்பசாமியும் எழுதிக்கொடுத்த பத்திரம் என்றால் எனக்கு படிக்கத்தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மால் விவரத்தில் தெற்கே, வடக்கே,கிழக்கே,மேற்கே என்று எழுதிக்கொடுத்ததில் யாருடைய இடம் என்று சொல்லியுள்ளதில் பிரதிவாதிகளுக்குரிய இடம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் தேனம்மாளிடமிருந்து வாங்கினேன்.

2) நான் கிரையம் பெற்ற பத்திரத்திலும் நான்கு மால்கள் விவரத்தில் பிரதிவாதிகளின் பெயருக்கு இடம் உள்ளதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் கட்டியுள்ள வீடு ஆதியில் எப்படி இருந்தது யாருக்கு சொந்தமானது என்று தெரியாது என்றால் சரிதான். தாவா இடத்தில பிரதிவாதிகள் முன்பே வீடு கட்டியிருப்பதாக முதல்விசாரணையில் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வாதிக்குப்பாத்தியப்பட்ட இடத்தில் ஆக்கிரமித்து வீடுகட்டியுள்ளார்கள் என்றும் நான் கொம்புமாடத்திக்கு கிரையம் கொடுத்த சொத்தின் விலை அதிகமானதால் மீண்டும் நான் அந்த சொத்தை தனக்கு எழுதிக்கொடுக்கும்படி கேட்டேன் என்றும் அதற்கு வாதி மறுத்தால் அவர்மீது விரோதம் கொண்டு அவருக்கு

விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
09.09.2025.